**மேர்ச்சன்ட் பாங் ஒவ் ஸ்ரீ லங்கா அன்ட் பினான்ஸ் பிஎல்சீ மற்றும் அதன் துணைக்கம்பனிகளின் - 2020**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

மேர்ச்சன்ட் பாங் ஒவ் ஸ்ரீ லங்கா அன்ட் பினான்ஸ் பிஎல்சீயினதும் (''கம்பனி'') கம்பனி மற்றும் அதன் துணைக்கம்பனிகளினதும் (''தொகுதி'') 2020 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்டக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளினதும் ஏனைய விளக்க தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையே நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காய்வாளர் நிறுவனம் ஒன்று எனக்கு உதவியது.

கம்பனி மற்றும் தொகுதியின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, தொகுதியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது குழுவை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியினதும் தொகுதியினதும் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனி வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நிய-ாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு தொகுதிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொகுதியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நட்டக்கழிவிற்காக குறிப்பிடத்தக்க வாடிக்கையாளர்களை தனித்தனியாக மதிப்பிடும் போது நோக்கத்துவ சான்றுகள் கம்பனியால் சரியாக பரிசீலிக்கப்பட்டிருக்கவில்லை, ஆகையால் வாடிக்கையாளரின் உண்மையான இடர் கருத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிடத்தக்க கணக்குகளை மதிப்பிடுவதற்காக பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.<br>1. கிடைக்கும் இடங்களில் கடன் பெறுபவரின் நிதிக்கூற்றின் பகுப்பாய்வை மேற்கொள்ளுதல்.<br>2. அந்தந்த கிளைகளில் இருந்து காலாண்டு அடிப்படையில் வாடிக்கையாளரின் கடனின் பின்னரான மதிப்பீட்டை கோருதல்.<br>3. கணக்கின் காசுப்பாய்ச்சலை அவ்வப்போது மதிப்பீடு செய்தல்.<br><br>**<u>தற்போதைய நிலை</u>**<br>வாடிக்கையாளர் இடரை சரியாக மதிப்பிடுவதற்கு இடர் பிரிவுடன் கலந்தாலோசித்து ”வாடிக்கையாளர் மதிப்பீட்டு படிவம்” அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், EY வளப் பணியாளர்களால் தனிப்பட்ட வாடிக்கையாளர் இடரை சரியாக மதிப்பிடுவதற்கு பதவியணியினரிற்கு பயிற்சி அளிப்பதற்காக பயிற்சித் திட்டமொன்று நடாத்தப்பட்டது. | சரியான நட்டக்கழிவு ஏற்பாட்டை மேற்கொள்வதற்காக முறையான வாடிக்கையாளர் மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |
| (ii) | பூச்சிய பணவளிப்புக்களை கொண்டுள்ள 105 எண்ணிக்கையிலான வசதிகள் உருவாக்கப்பட்டு போர்ட்போலியோவில் (portfolio) உள்ளடக்கப்பட்டிருந்தன. அந் நிதி இன்னமும் | இவை கடன் தவணையுரிமை (moratorium) கடன்களின் நகல் மற்றும்/ அல்லது தவறான உருவாக்கம் ஆகும். எனினும் இந்தக் கணக்குகளில் சில மூடப்பட்டதுடன் மீதமுள்ள ஏனையவை முறைமையில் | முறைமையில் பூச்சிய பணவளிப்பு வசதிகள் இல்லாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. 105 வசதிகளில் 97 வசதிகள் 2020 நவம்பர் மற்றும் திசெம்பர் காலப்பகுதியில் உருவாக்கப்பட்டுள்ளன. | மூடப்படும்.<br><br>**<u>தற்போதைய நிலை</u>**<br>முறைமையில் குறித்த வசதிகள் முறைமையில் அழிக்கப்பட்டுள்ளன. | |

### 1.5.2 பொருத்தமற்ற பெறுமதி கணிப்பீடு அல்லது மதிப்பீடு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனி தற்போதும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற ரூபா 521 மில்லியன் தொகையான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை முழுமையாக பெறுமானத்தேய்விட்டிருந்தது. பயன்படுத்தக்கூடிய நிலைமையின் அடிப்படையில் அந்தச் சொத்துகளின் பயன்தரு ஆயுட்காலத்தை மீள்மதிப்பீடு செய்வதற்குத் தேவையான ஏற்பாடுகளை கம்பனி எடுத்திருக்கவில்லை. | பௌதீக மெய்மையாய்வு மற்றும் நிலையான சொத்துகளை குறியீடுடுதல் பூர்த்தியடைந்ததும் மீள்மதிப்பீட்டில் உள்ள தொகை மற்றும் கிரயத்தை பொறுத்து தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>**தற்போதைய நிலை**<br>சொத்து வகையின் முழு வகுப்பாக பயன்தரு ஆயுட்காலம் அதிக எண்ணிக்கையிலான உருப்படிகளுடன் மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டும். அதிக கிரயத்தை கருத்தில் கொண்டு, வெளியக கணக்காய்வாளரின் ஆலோசனை ஆலோசிக்கப்பட்டு வருகிறது. | இன்னும் பயன்பாட்டில் உள்ள முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துகளின் பயன்தரு ஆயுட்காலத்தை மீள்மதிப்பீடு செய்வதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ”பெறவேண்டிய காப்புறுதி முகவர் தரகு” என வகைப்படுத்தப்பட்டுள்ள ரூபா 14,147,683 பெறவேண்டிய நீண்டகால நிலுவை மீதி அவதானிக்கப்பட்டது. அம் மீதியானது வாடிக்கையாளர் பெற்றிருக்காத காப்புறுதி கம்பனிகளின் வற் பகுதியைக் கொண்டுள்ளது. | உள்ளக கணக்காய்வு பிரிவின் பரிந்துரையுடன் நீண்டகால நிலுவை மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு சபை அங்கீகரித்த கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது. உள்ளக கணக்காய்வானது கணக்காய்வுக் குழுவிற்கு பதிவழிப்பு பத்திரத்தை சமர்ப்பித்திருந்ததுடன் பதிவழிப்பு கொள்கையின் பிரகாரம் நீண்டகால நிலுவை மீதியை பதிவழிப்பதற்கு கணக்காய்வுக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. | நீண்ட கால மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

**தற்போதைய நிலை**
சபை அங்கீகாரத்தை பெற்ற பின்னர் 2021 ஒக்தோபரில் ரூபா 14 மில்லியன் நீண்டகால நிலுவை மீதி தீர்ப்பனவு செய்யப்பட்டது.

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

**கணக்காய்வு விடயம்**

கடன்கொடுத்தோர் தற்காலிக கணக்குகள், இனங்காணப்படாத நேரடி வைப்பு மற்றும் சமர்ப்பிக்கப்படாத கொடுப்பனவு கணக்குகளில் நீண்டகால நிலுவை மீதிகள் அவதானிக்கப்பட்டன. நீண்டகால நிலுவை மீதிகளின் வயது பகுப்பாய்வு கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

| விபரம் | நிலுவையாகவுள்ள காலப்பகுதி | | | | |
|---|---|---|---|---|---|
| | 0-1 | 1-3 | 3-5 | 5 ஆண்டுகளிற்கு மேல் | மொத்தம் |
| கடன்கொடுத் தோர் | 12,600 | 7,852,644 | 3,097,115 | 104,601,496 | 115,563,855 |
| இனங்காணப் படாத நேரடி வைப்பு | - | - | 4,253,600 | 16,638,549 | 20,892,149 |
| சமர்ப்பிக்கப்ப டாத கொடுப்பனவு கள் | - | 1,399,678 | 2,354,981 | 9,947,389 | 13,702,048 |
| மொத்தம் | 12,600 | 9,252,322 | 9,705,696 | 131,187,434 | 150,158,052 |

**முகாமைத்துவ கருத்துரை**

5 ஆண்டு சராசரி கடன் காலப்பகுதியை கருத்தில் கொண்டு உள்ளக கணக்காய்வுப் பிரிவின் பரிந்துரையுடன் நீண்டகால நிலுவை மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு சபை அங்கீகரித்த கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது. உள்ளக கணக்காய்வானது கணக்காய்வுக் குழுவிற்கு பதிவழிப்பு பத்திரத்தை சமர்ப்பித்திருந்ததுடன் பதிவழிப்பு கொள்கையின் பிரகாரம் நீண்டகால நிலுவை மீதியை பதிவழிப்பதற்கு கணக்காய்வுக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

**தற்போதைய நிலை**
<u>**கடன்கொடுத்தோர்**</u>
மேலே குறிப்பிட்டுள்ள மீதி ரூபா 104.5 மில்லியனாக குறைக்கப்பட்டுள்ளது.

**பரிந்துரை**

தற்காலிக கணக்குகளில் நீண்ட காலமாக நிலுவையாகவுள்ள மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

**<u>இனங்காணப்படாத நேரடி வைப்புக்கள்</u>**

குறிப்பிட்ட மீதியில், 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 18 மில்லியன் தொகை சபை அங்கீகாரத்தை பெற்ற பின்னர் 2021 ஒக்தோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**<u>சமர்ப்பிக்கப்படாத கொடுப்பனவுகள்</u>**

குறிப்பிட்ட மீதியில் 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 11 மில்லியன் தொகை சபை அங்கீகாரத்தை பெற்ற பின்னர் 2021 ஒக்தோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 1,108 மில்லியன் நட்டமாக காணப்பட்டதுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 103 மில்லியனாக இருந்ததால் நிதி விளைவுகளில் ரூபா 1,211 மில்லியன் தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. வட்டி வருமானம் குறைவடைந்தமை, கடன்கள் மற்றும் ஏனைய நட்டங்களிற்கான நட்டக்கழிவு கட்டணங்கள் அதிகரித்தமை மற்றும் துணைக்கம்பனிகளிலுள்ள முதலீடு தொடர்பாக ரூபா 463 மில்லியன் நட்டக்கழிவு கட்டணம் இனங்காணப்பட்டமை என்பன இவ் வீழ்ச்சிக்கான பிரதான காரணங்களாகும்.

### 2.2 முக்கிய வருமான செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் முக்கிய வருமான செலவின விடயங்களின் பகுப்பாய்வு அதிகரிப்பு அல்லது குறைவடைதல் சதவீதத்துடன் கீழே தரப்பட்டுள்ளது.

| விபரம் | 2020 (ரூபா.'000) | 2019 (ரூபா.'000) | மாற்றம் (%) | வேறுபாட்டிற்கான காரணம் |
|---|---|---|---|---|
| வட்டி மற்றும் ஒத்த வருமானம் | 4,950,638 | 6,532,729 | (24) | முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் மொத்தக் கடன்கள் மற்றும் முன்பணங்கள் குறைவடைந்ததன் காரணமாகவும், moratorium கடன்கள் தொடர்பாக ரூபா 658 மில்லியன் அறவிடப்பட்டிருந்தமையாலும் வட்டி வருமானம் பிரதானமாக குறைவடைந்துள்ளது. மீளாய்வாண்டிற்கான மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 1,912 மில்லியன் அல்லது 6 சதவீதம் குறைவடைந்துள்ளது. |
| வட்டி மற்றும் ஒத்த செலவினங்கள் | 3,532,790 | 4,331,275 | (18) | வைப்பு அடிப்படை மற்றும் கம்பனியின் கடன்கள் குறைவடைந்ததால் வட்டிச் செலவினம் குறைவடைந்துள்ளது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் கம்பனியின் வைப்பு அடிப்படை ரூபா 1,031 மில்லியன் அல்லது 4.5 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் கடன்கள் ரூபா 2,312 மில்லியன் அல்லது 30 சதவீதம் குறைவடைந்துள்ளது. |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 116,893 | 208,928 | (44) | கொவிட் 19 இற்குப் பின்னர் எதிர்மறையான பேரின பொருளாதார நிலைமைகளால் பாதிக்கப்பட்ட குறைந்த பணவளிப்புக்கள் காரணமாக குறைந்த ஆவணப்படுத்தல் வருமானம் மற்றும் காப்புறுதி வருமானம் என்பன அறிக்கையிடப்பட்டுள்ளன. |
| கட்டணம் மற்றும் தரகு செலவினம் | 22,071 | 25,847 | (15) | கொவிட் 19 இற்குப் பின்னர் எதிர்மறையான பேரின பொருளாதார நிலைமைகளால் பாதிக்கப்பட்ட குறைந்த பணவளிப்புக்கள் காரணமாக குறைந்த வணிக அறிமுக தரகு செலுத்தப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | 46,541 | 68,938 | (32) | கொவிட் 19 இற்குப் பின்னர் எதிர்மறையான பேரின பொருளாதார நிலைமைகளால் பாதிக்கப்பட்ட உண்மையான தோட்ட வருமானம் மற்றும் பதிவழிப்பு செய்யப்பட்ட சேகரிப்பு என்பவற்றில் வீழ்ச்சி |
| கடன்கள் மற்றும் ஏனைய நட்டங்களுக்கான நட்டக்கழிவு கட்டணங்கள் | 563,431 | 279,673 | 101 | கொவிட் 19 இற்குப் பின்னர் எதிர்மறையான பேரின பொருளாதார நிலைமைகள் காரணமாக 90 இற்கும் மேற்பட்ட நிலுவை போட்போலியோவில் அதிகரிப்பு. |
| துணைக் கம்பனிகளிலுள்ள முதலீட்டின் நட்டக்கழிவு மாற்றுதல்/(கட்டணம்) | (462,544) | 270,692 | 271 | கொவிட் 19 இற்குப் பின்னர் எதிர்மறையான பேரின பொருளாதார நிலைமைகள் காரணமாக வணிக மதிப்பீட்டில் வீழ்ச்சி. |

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

-----------------------------------

கிடைக்கப் பெற்ற தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டிற்கான கம்பனியின் சில முக்கியமான விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **விபரம்** | **துறை விகிதம் *** | **கம்பனி** | |
|---|---|---|---|
| | | **2020** | **2019** |
| **செயலாற்றல் விகிதங்கள்** | | | |
| உரிமை மீதான திரும்பல் (ஆர்ஓஈ) | 10.9 | (54.39) | 4.00 |
| சொத்துக்கள் மீதான திரும்பல் (ஆர்ஓஏ) | 1.0 | (3.20) | 0.28 |
| வட்டி எல்லை | 3.1 | 4.50 | 6.52 |
| **சொத்துக்கள் தர விகிதம்** | | | |
| மொத்த செயற்பாடற்ற முற்பணங்கள் (என்பிஎல்) | 4.7 | 13.9 | 10.6 |
| **மூலதன போதுமை விகிதங்கள்** | | | |
| தட்டு 1 மூலதனம் (ஆகக் குறைந்தது 6.5%) | | 4.41 | 5.64 |
| மொத்த மூலதனம் (ஆகக் குறைந்தது 10.5%) | | 5.59 | 8.64 |
| **நியதிச்சட்ட விகிதம்** | | | |
| திரவச் சொத்துக்கள் விகிதம் | | 8.17 | 12.30 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டில் ரூபா 1,108 மில்லியன் நட்டம் ஏற்பட்டதால், உரிமை மீதான திரும்பல் மற்றும் சொத்து மீதான திரும்பல் விகிதங்கள் பாதகமாக மாறியிருந்தன.

(ii) கம்பனியின் தட்டு 1 மூலதனம் மற்றும் மொத்த மூலதன விகிதங்கள் 2020 ஆம் ஆண்டில் முறையே 4.41 சதவீதம் மற்றும் 5.59 சதவீதம் ஆகும், அவை குறைந்தபட்ச ஒழுங்குமுறைத் தேவைப்பாடான 6.5 சதவீதம் மற்றும் 10.5 சதவீதத்திற்கும் குறைவாக உள்ளன. ஆகையால் இலங்கை மத்திய வங்கி முறையே 2019 ஏப்ரல் மற்றும் மே 2019 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் கடன் மற்றும் முற்பணங்கள் (தொங்கலில் உள்ள தேறிய வட்டி) தொடர்பான ரூபா 35 பில்லியன் மற்றும் வைப்புக்கள் தொடர்பான ரூபா 23 பில்லியன் வரம்புகளுடன் விதித்துள்ளது.

(iii) முன்னைய ஆண்டில் 10.6 சதவீதமாக இருந்த கம்பனியின் மொத்தச் செயற்பாடற்ற முற்பண விகிதம் 13.9 சதவீதமாக அதிகரித்துள்ளதுடன் இவ் விகிதம் 4.7 சதவீத துறை விகிதத்தை விட மிகவும் உயர்வாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

2020 ஆம் ஆண்டின் போது உள்ளக கணக்காய்வு பிரிவால் விசாரணை செய்யப்பட்ட முக்கிய மோசடியான செயற்பாடுகள் கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

| கணக்காய்வு விடயம் | | | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| கிளை | விபரம் | ஏற்பட்ட மொத்த நிதி நட்டம் (ரூபா) | | |
| மொனராகலை | போலி ஆவணங்களில் 11 குத்தகை வசதிகள் வழங்கப்பட்டன. | 16.63 மில்லியன் | சட்டப் பிரிவினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலின் பிரகாரம் வாடிக்கையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் வழக்குகளின் செயன்முன்னேற்றத்தைப் பொறுத்து ஏனைய வழக்குகளுக்கு முன்னோக்கி செல்லும். கிளை முகாமையாளர் ஹட்டன் கிளைக்கு இடமாற்றம் செய்யப்பட்டு தற்போது அறவீட்டு பிரிவில் பணியாற்றி வருகிறார். | எதிர்காலத்தில் இதுபோன்ற மோசடி நடவடிக்கைகள் இடம்பெறாமல் தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு பரிந்துரை செய்யப்படுகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| திஸ்ஸம ஹாராம | போலியானதும் பொய்யானதுமான ஆவணங்களைச் சமர்ப்பித்து 21 எண்ணிக்கையான கடன்கள் மற்றும் குத்தகை வசதிகளை பெற்றுக்கொண்டமை. | 32.17 மில்லியன் | ஒழுக்காற்று விசாரணையின் அடிப்படையில் கிளை முகாமையாளர் 2020-02-20 (பின்னர் திகதி 2021-07-15) முதல் செயற்படும் வகையில் பதவிநீக்கம் செய்யப்பட்டிருந்தார். மேலும், இந்த மோசடியில் ஈடுபட்ட கிளை முகாமையாளர் மற்றும் மூன்றாம் தரப்பினருக்கு எதிராக 2021-07-13 இல் சிஐடியில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. | எதிர்காலத்தில் இதுபோன்ற மோசடி நடவடிக்கைகள் இடம்பெறாமல் தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு பரிந்துரை செய்யப்படுகிறது. |
| காலி | Mass Eco Cabana காசோலையை தவறாகப் பயன்படுத்தியமை. | 5.215 மில்லியன் | முன்னாள் காலி கிளை முகாமையாளரிடம் இருந்து நட்டத்தை அறவீடு செய்வதற்காக 2021 யூன் 25 இல் மோசடிப் பணியகத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. | எதிர்காலத்தில் இதுபோன்ற மோசடி நடவடிக்கைகள் இடம்பெறாமல் தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு பரிந்துரை செய்யப்படுகிறது. |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியின் அடகு முற்பணங்கள் தொடர்பாக உள்ளக கணக்காய்வு பிரிவினரால் கிளை கணக்காய்வு பரீட்சிப்புக்களின் போது பின்வரும் பொதுவான பலவீனங்கள் இனங்காணப்பட்டுள்ளன. | | |
| (i) நாளதுவரையாக்கப்பட்ட பிரிவு கையேடு கிடைக்காதமை அவதானிக்கப்பட்டது. | நாங்கள் அடகு வைத்தல் நடைமுறை கையேடு, அடகு தரகு நடைமுறை கையேட்டை 2019 இல் அங்கீகரித்திருந்த போதிலும் நாளதுவரையாக்கப்பட்ட பிரிவு நடைமுறை கையேட்டை நாங்கள் கொண்டிருக்காததுடன் கடைசியாக 2014 இல் நாளதுவரையாக்கப்பட்டது. தற்போது இது சீர்செய்யப்பட்டுள்ளது. அடகு | கம்பனியின் கையேடுகளை அடிக்கடி மீளாய்வு செய்து நாளதுவரையாக்குவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| | | தரகு நடைமுறை கையேடு மற்றும் பிரிவு நடைமுறை கையேடு ஆகியவற்றை ஒன்றாக இணைத்து 2021 இல் சபையால் அங்கீகரிக்கப்பட்ட அடகு நடைமுறை கையேட்டை நாங்கள் கொண்டுள்ளோம். | |
| (ii) | கம்பனியால் பரிந்துரைக்கப்பட்ட ஒப்படைக்கப்பட்ட அதிகார எல்லைகளை மீறுவதன் மூலம் அடகு முன்பணங்களை அங்கீகரித்தல். | ஒரு வேளை, DA இன் பிரகாரம் கைமுறையாக அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடைமுறைச் சிக்கல் இருந்தால், தொகையைப் பொறுத்து AGM வைப்பு அல்லது CEO இடம் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். இந் நோக்கங்களுக்காக குறிப்பாணையை தலைமை அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டியுள்ளது. இதனால், கைமுறையாக அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதில் தாமதம் ஏற்படுவதை நாங்கள் அவதானித்துள்ளோம். எனினும், முறைமை அங்கீகாரம் எடுக்கப்பட்டுள்ளது. இது தற்போது சீர்செய்யப்பட்டு மின்னஞ்சல் மூலம் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | கம்பனியால் வழங்கப்பட்ட சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுடன் இணங்குவதை உறுதிப்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |
| (iii) | வாடிக்கையாளர் ஒருவருக்கு அதிகபட்ச அடகு எல்லையை மீறி அடகு முன்பணங்களை வழங்குதல். | இது பொதுவான விலகல் அல்ல, அரிதாகவே நிகழ்கிறது. | கம்பனியால் வழங்கப்பட்ட சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுடன் இணங்குவதை உறுதிப்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |
| (iv) | சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் அடகு வைத்தல் நாளாந்த முற்பணம் வழங்கும் அறிக்கையில் கையெழுத்திடப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | கம்பனியால் வழங்கப்பட்ட சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுடன் இணங்குவதை உறுதிப்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |
| (v) | குறைந்த கரட்டிலான தங்க நகைகளை ஏற்றுக்கொள்ளுதல். | இது பல சந்தர்ப்பங்களில் மொத்த அடகு முற்பணங்களுக்கு நிகழ்ந்தது. 2g இற்குக் கீழே சில நகைகள் | கம்பனியால் வழங்கப்பட்ட சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுடன் இணங்குவதை |

| | | | |
|---|---|---|---|
| | | காணப்பட்டன. இது தற்போது சீர்செய்யப்பட்டு, 2g இற்குக் கீழே உள்ள நகைகளை மொத்தமாக அடகு வைத்தல் முற்பணத்துடன் ஏற்றுக்கொள்வதற்கும், அடகு வைத்தல் முகாமையாளரின் அங்கீகாரத்துடன் தனிப்பட்ட விடயங்களுக்கு 2g இற்குக் கீழே ஏற்றுக்கொள்வதற்கும் நடைமுறை கையேட்டில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. | உறுதிப்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |
| (vi) | சில கிளைகள் எடை அளவிடல் உரிமப்பத்திரங்களை புதுப்பிக்காதமை. | இது பொதுவான விலகல் அல்ல. அத்துடன் கொவிட் தாக்கத்தால் அரிதாகவே இது இடம்பெற்றுள்ளது. | உரிய திகதிகளில் எடை அளவிடல் உரிமப்பத்திரங்களை புதுப்பிப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |
| | 2020 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரகாரம் பாதுகாப்பு மற்றும் தொடர்புடைய கோவைகளில் முழுமையனதும் போதுமானதுமான ஆவணங்கள் காணப்படாதமை கம்பனியின் கடன் வழங்கல் செயன்முறை தொடர்பாக அவதானிக்கப்பட்ட பொதுவான பலவீனம் ஆகும். | கருத்துரை வழங்கப்படவில்லை. | கடன் வழங்கும் செயன்முறைக்காக கம்பனியால் வழங்கப்பட்ட சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுடன் இணங்குவதை உறுதிப்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

**3.3 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டிற்கான பெறுகை இலக்குகளுக்கு எதிராக அடைந்துகொள்ளப்பட்ட செயன்முன்னேற்றத்தை பகுப்பாய்வு செய்யும் போது கணிசமானளவு விலகல்கள் அவதானிக்கப்பட்டன. விபரங்கள் கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன. | கருத்துரை வழங்கப்படவில்லை. | ஒரு குறிப்பிட்ட ஆண்டிற்கான அடைந்து கொள்ளக்கூடிய பெறுகைத் திட்டத்தை தயாரிப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

| பெறுகை வகை | மதிப்பிடப்பட்ட பெறுமதி (ரூபா)’000 | உள்ளபடியானது (ரூபா)’000 | மதிப்பீட்டின் % ஆக செயன் முன்னேற்றம் |
|---|---|---|---|
| அலுவலக உபகரணம் | 59,687 | 4,662 | 7.81 |
| கிளை இடம்மாற்றம் | 30,250 | 8,181 | 27.04 |

### 3.4 மனித வள முகாமைத்துவம்

**கணக்காய்வு விடயம்**

2020 ஆம் ஆண்டிற்கான கம்பனியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 1,299 ஆக இருந்தததுடன் அத் திகதியில் உள்ளபடியான பதவியணியினர் 976 ஆக இருந்தது. ஆகையால் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 414 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டன. மேலும் கனிஷ்ட நிறைவேற்றுநர் வகைப்படுத்தலில் 88 எண்ணிக்கையிலான மேலதிக ஊழியர்கள் அவதானிக்கப்பட்டனர். விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | 2020/12/31 இல் உள்ளவாறான பதவியணியினர் | வேறுபாடு |
|---|---|---|---|
| பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் (பதில்) | 1 | 1 | - |
| பிரதி பொது முகாமையாளர் | 5 | 2 | 3 |
| உதவி பொது முகாமையாளர் | 11 | 5 | 6 |
| பிரதம முகாமையாளர்/ பிராந்திய முகாமையாளர் | 10 | 8 | 2 |
| சிரேஷ்ட முகாமையாளர் | 28 | 16 | 12 |
| முகாமையாளர் | 50 | 45 | 5 |
| பிரதி முகாமையாளர் | 120 | 61 | 59 |
| உதவி முகாமையாளர் | 101 | 91 | 10 |
| நிறைவேற்றுநர் | 170 | 122 | 48 |
| கனிஷ்ட | 75 | 163 | (88) |

**முகாமைத்துவ கருத்துரை**

அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எதிர் உள்ளபடியான பதவியணியினரிற்கு எதிராக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியில் 414 வெற்றிடங்கள் காணப்படவில்லை. அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் முக்கியமாக பொருண்மையாக காணப்படாத வணிக விரிவாக்கத்தை நோக்கமாகக் கொண்டுள்ளது, பதவி விலகல் காணப்பட்டால் அதற்குப் பதிலீடு வழங்கப்படுகின்றது.

வணிகத் தேவைப்பாடுகளின் அடிப்படையிலும் பதவி விலகும் பதவியணியினரின் அடிப்படையில் கிரயத்தை குறைப்பதற்காகவும் உயர்

**பரிந்துரை**

கம்பனியின் செயற்பாடுகள் சீராக இடம்பெறுவதற்கு தற்போதுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| நிறைவேற்றுநர் | | | | தரநிலைகளில் இருந்த கனிஷ்ட நிறைவேற்றுநர் தரத்திற்கு மீண்டும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதுடன் சந்தைப்படுத்தல் பதவியணியினரை கவரும் வகையில் அவர்கள் கனிஷ்ட நிறைவேற்றுநர் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர். |
| பதவியணி உதவியாளர் | 505 | 402 | 103 | |
| சந்தைப்படுத்தல் உதவியாளர் | 131 | 3 | 128 | |
| அலுவலக உதவியாளர் | 73 | 35 | 38 | |
| பயிற்சி பணி ஒதுக்கீடு | 7 | 7 | - | |
| சாரதிகள் | 9 | 10 | (1) | |
| ஏனையவை | 3 | 5 | (2) | |
| மொத்தம் | **1299** | **976** | | |